**பூஜாபிட்டிய பிரதேச சபை - 2024**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பூஜாபிட்டிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூஜாபிட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வலப்பனை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் செயற்படுத்தப் பட்ட 08 அபிவிருத்தி செயற் திட்டங்களின் பெறுமதி ரூபா 1,215,343 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பொருள் கணிப்பீட்டு சபை அறிக்கைகளில் பரிந்துரைகளின் பிரகாரம் அகற்றப்பட்டிருந்த ரூபா 209,930 கூட்டுப்பெறுமதியான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் தொடர்ந்து காண்பிக்கப்பட்டு இருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்குத் எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப் பட்டிருந்த ரூபா 4,461,069 கூட்டுத் தொகையான சொத்து 02 விடயங்களுக்குரிய அட்டவணைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் | அடையாளம் காண்பதற்கு சிரமமாக உள்ளதாக. | சொத்துக்களை சரியாக இனங் காண்பதற்குரிய பதிவேடுகளை பேணி செல்ல வேண்டியதுடன் இனங்காண முடியாத சொத்துக்களை |

| | | | |
|---|---|---|---|
| சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திநகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டுச் கட்டளைச் சட்டம்** | | | |
| | 20 ஆம் பிரிவு | வீதவரிக்குரிய ஆதனங்கள் மதிப்பீடு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டில் மேற்கொண்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற் காகவும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதாக. | உரிய காலத்தில் ஆதனங்கள் மதிப்பீடு செய்து வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | **1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| | 218 ஆம் பிரிவு | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டு அவற்றின் இருப்பு உறுதிப்படுத்தப் பட வேண்டும். |
| (இ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | நி.பி. 571(3) | 2018 – 2022 வரையான காலப்பகுதிக்குரிய காலா வதியான ரூபா 124,982 ஆன காலாவதியான 08 வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,387,736 ஆக

இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 28,861,015 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,376,130 | 4,345,330 | 4,488,541 | 2,782,551 | 4,309,000 | 4,703,603 | 3,147,636 | 2,925,762 |
| (ii) | வாடகை | 5,821,456 | 6,208,656 | 6,438,466 | 421,584 | 6,540,000 | 6,416,060 | 5,764,666 | 651,394 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங் கள் | 2,563,810 | 2,791,705 | 2,791,705 | - | 2,575,150 | 2,425,460 | 2,425,460 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,842,050 | 48,206,259 | 77,185,481 | 40,524,975 | 29,439,400 | 50,736,246 | 14,961,756 | 69,504,197 |
| | | 16,603,446 | 61,551,950 | 90,904,193 | 43,729,110 | 42,863,550 | 64,281,369 | 26,299,518 | 73,081,353 |

### 2.2.2 சபையின் வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 2,762,956 ஆக காணப்பட்டதுடன் அதில் அலகொன்று நிலுவை வீதவரி ரூபா 5,000 ஐ மிகைத்த 48 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 304,433 கூட்டுத்தொகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெறவேண்டிய வருமானங்கள் |

| | |
|---|---|
| அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 38,950,430 ஆக இருந்தது. அதில் 2015 – 2017 காலப்பகுதிக்குரிய கிடைக்க வேண்டிய் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 3,278,780 ஆக இருந்தது. | அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரசேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் மிகை நிதியை சபைக்கு வருமானம் ஈட்டக்கூடிய வகையிலான திட்டங்கள் மற்றும் ஆதனங்களை அபிவிருத்தி செய்யும் திட்டங்களுக்காக ஈடுபடுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 37,450,000 கூட்டுத்தொகையான பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் சேமிப்புக் கணக்கில் ரூபா 80,433,735 தொகை விளைவற்ற வகையில் காணப்பட்டன. | எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதாக. | மிகை பணத்தை பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு பெற வேண்டிய நிர்மாண கடன்பட்டோர் மீதி மொத்தம் ரூபா 4,064, 562ஆக இருந்தது. அதில் 3 ஆண்டுகளுக்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதி ரூபா 351,209 ஆக இருந்தது. . | அமைச்சின் நிதி ஏற்பாட்டிற்காக பிடிகாசு கிடைக்கவில்லை என்பதாக. | பெற வேண்டிய மீதிகளைத் தீர்வு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 11,783,175, ஆக இருந்தது. அதில் 1 இற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 191, 395ஆகவும் 3 இற்கும் 5 | அமைச்சின் நிதி ஏற்பாடு கிடைக்காததன் பேரில் கடன் கொடுத்தோர் ஏற்பட்டதாக. | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்வு செய்ய வேண்டும். . |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 356, 882ஆக இருந்தது. | | |
| (இ) | 2008 ஆம் ஆண்டில் இருந்து வரும் பங்களிப்பு ஓய்வூதிய சம்பளம் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 3,221,904 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிக்கலான நிலைமை ஒன்றாக இருப்பதால் கொடுப்பளவு தாமதமாக் கப்பட்டுள்ளதாக. | சிக்கல்களை தீர்வு செய்து விரைவில் பங்களிப்பு தொகை செலுத்தப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 8,538,424 கூட்டுப் பெறுமதியான 03 வாகனங்களும் பெறுமதி இனங்காண முடியாத வேன் வண்டி ஒன்றும் 06 ஆண்டுகளுக்கும் 10 இற்கும் இடைப்பட்ட காலமாக விளைவற்றோ அல்லது குறை பயன்பாட்டிற்கு உட்பட்டு இருந்தது. | வேறு நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு அல்லது கை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பாட்டுக்கு எடுப்பதற்கு அல்லது கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை பயன்படுத்துகின்ற பெறுமதி இனங்காணப்படாத காணிகள் மற்றும் 09 கட்டிடங்கள் மற்றும் ரூபா 7,967,144 பெறுமதியான கல்ரோலர் ஒன்று என்பவற்றின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தை கையேற்பதற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரித்தை சட்டரீதியாக கையேற்க வேண்டும். |
| (ஆ) | கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக உத்தேச எனசல்மட காணியை அளத்தல் மற்றும் கையேற்றல் கட்டணமாக ரூபா 400,000 தொகை காணி சீர்திருத்த சபைக்கு 2013 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் காணி சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் காணிகளை விடுவிப்பதாக. | - மேற்படி - |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 11 பதவிகளில் 21 | அரசின் கொள்கைகள் செயற்படுத்தப் பட்டதாக. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து பொது மக்கள் தேவைகள் செயற்திறனாக நிறைவேற்றப்பட வேண்டும். |

வெற்றிடங்களும் பதவியொன்றில் 09 மிகைகளும் காணப்பட்டன.

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 (ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் இருந்து மலக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக முறையாக குழிகளை உரிய காலப் பகுதியில் சுத்திகரிப்பதற்கும் வெறுமையாக்கு வதற்கும் முடியுமான வகையில் கலிவண்டி சேவை ஒன்று நடத்திச் செல்லப்பட்டு இருக்க வில்லை. | வெளியேற்றுவதற்கு பொருத்தமான இடமொன்று இல்லையென்பதாக. | சிக்கல்களைத் தீர்வு செய்து பொது மக்கள் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் ,லக்க நிலைபேறான அபிவருத்திச் சட்டத்தின் நியதிகளின் படி, சபையால் நிலைபேறான அபிவிருத்தி நேக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும், அவை அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. . | அடைந்து கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையாளம் காணப்பட்டு செயல்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |